# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 27, 2026 | Weekly E-paper ● June 27, 2026




# வந்துவிட்டார் மாணிக்கம் தாகூர்!

# சென்றுவிட்டார் வைகோ!

## முதலமைச்சரால் சட்டமன்றத்திற்குத் தலைகுனிவு!

விடுதலை ராஜேந்திரன்

## வீரபாண்டிய கட்டபொம்மன்

தலையங்கம்

## இது, அவாள்களின் காலம்!

குமரன் தாஸ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 27, 2026

Weekly E-paper ●June 27, 2026


## தமிழ்நாட்டின் சார்பில் ஒரு கன்னடரை அனுப்புவதா?

### திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் கண்டன அறிக்கை!



தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழகப் பிரதிநிதியாகத் திரு கே.வெங்கட நாராயணா என்னும் கன்னடர் நியமிக்கப்பட்டுள்ளார் என்னும் செய்தி அதிர்ச்சியைத் தருகிறது! முதலமைச்சர் விஜய் நடித்த ஜனநாயகன் படத்தின் தயாரிப்பாளர் அவர் என்பதே அவருக்கான ஒரே தகுதியாக இருக்கிறது!

இதற்கு முன்பு கம்பம் செல்வேந்திரன், ஏ.கே.எஸ்.விஜயன் போன்ற அரசியல் அனுபவம் உள்ளவர்கள் அந்தப் பொறுப்பில் இருந்தனர். இப்போது எந்த அனுபவமும் அற்ற, தமிழ்நாட்டு அரசியலில் எந்தப் பங்கும் வகிக்காத, தமிழராகவும் அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்பது தமிழர் நலன் எவ்வளவு அட்சியப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதற்கான சான்றாக உள்ளது!

இன்னொரு வேதனையான அறிவிப்பும், தமிழ்நாடு அரசின் அமைச்சர் செங்கோட்டையனிடம் இருந்து வெளியாகி உள்ளது! மாணவர்களின் அடையாள அட்டையில் அவர்களுடைய பெயர், ரத்தவகை, முகவரி, இவைகளைத் தாண்டி, அவர்களின் சாதி பற்றிய குறிப்பும் இடம்பெறும் என்று அமைச்சர் கூறி உள்ளார்!

சாதியின் அடையாளமாக, மாணவர்கள் கைகளில் கட்டி இருக்கும் கயிறுகளையே தடைசெய்ய வேண்டும் என்று நீதிபதி சந்துரு அவர்களின் தலைமையிலான குழு அறிவித்திருந்தது. இப்போது அடையாள அட்டையிலேயே சாதியைக் குறிப்பிடுவது எதற்காக என்பதும், எந்த விதத்தில் இது நியாயம் என்பதும் புலப்படவில்லை!

இதுபோன்ற அறிவிப்புகளையும், எதிர்த்துக் கேள்வி கேட்கும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு போன்றோர் வீடுகளில் அரசியல் உள்நோக்கத்துடன் சோதனைகள் நடத்துவதையும், திராவிட இயக்கத் தமிழர் பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது!

## வந்துவிட்டார் மாணிக்கம் தாகூர்! சென்றுவிட்டார் வைகோ!





இரண்டுமே எதிர்பார்த்ததுதான்! தேர்தலில் கூட்டணி அமைத்து நம்மோடு பயணித்த காங்கிரஸ் கட்சி, சேர்ந்து இருந்த போதே பிரிந்து நின்றது!

கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போதே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் திமுகவை எதிர்த்துப் பேசிக் கொண்டிருந்தனர்! அவர்களில் ஒருவர் இப்போது தவெக ஆதரவில் நாடாளுமன்ற மாநிலங்களவையின் உறுப்பினர் ஆகிவிட்டார். இன்னொருவர் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அவர்களின் பிழை இல்லை! கூடாநட்பு கேடாய் முடியும் என்று அறிந்தும், அவர்களை நம்பி நாம் நட்புக்குக் கை கொடுத்தோம்! ஆனால் அவர்கள் கழுத்துக்கு மாலை விழும் இடம் நோக்கிச் சென்று விட்டார்கள்!

மதிமுக வின் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள், எப்போதும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசக்கூடியவர். ஆனால் எப்போதாவதுதான், உண்மையைப் பேசக்கூடியவராக இருந்திருக்கிறார்! வாரிசுஅரசியலைஎதிர்த்துகட்சியைவிட்டுவிலகிச்சென்றஅவர்தன்மகன்துரைவைகோவைகட்சிக்கு வாரிசாக்கினார்.

அவரோ அப்பாவை மிஞ்சிய கோபக்காரராகவும், ரோஷக்காரராகவும் இருக்கிறார். திமுக கூட்டணி தொடராது என்பதை மறைமுகமாகவும், தவெக ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்பதை நேரடியாகவும் அவர் பல நாள்களுக்கு முன்பே கூறியுள்ளார்.

திமுக கூட்டணியில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகிக்கும் துரை வைகோ மிக விரைவில் அந்தப் பதவியை விட்டு விரைவில் விலகிவிடுவார் என்று புரிகிறது! ரோஷக்காரர்கள் எப்போதும் அப்படித்தான் இருப்பார்கள்!

## மறைந்துவிட்டார் பாக்கியராஜ்!

15 நாள்களுக்கு முன்புதான் இயக்குனர் இமயம் பாரதிராஜா நம்மை விட்டு மறைந்தார்! இப்போது அவருடைய மாணவராகத் தமிழ்த் திரை உலகிற்கு வந்த மிகச்சிறந்த கதை ஆசிரியரும், இயக்குனர் – நடிகருமான பாக்கியராஜ் அவர்களும் மறைந்து விட்டார்!



முதல் நாள் மாலை பாக்கியராஜ் ஒரு திருமண வரவேற்புக்குச் சென்று வந்திருக்கிறார். இறந்து போன நாளிலும் கூட காலை வரையில் நன்றாகவே இருந்திருக்கிறார். நடைப் பயிற்சிக்குச் சென்று வந்திருக்கிறார். சட்டென்று ஏற்பட்ட நெஞ்சு வலியும், மயக்கமும் அவரைக் கொண்டு போய் விட்டன!

திரை உலகில் மட்டுமின்றி, அரசியல், இதழியல் ஆகிய துறைகளிலும் கால் பதித்தவர். எம்.ஜி.ஆரால் தன் கலை வாரிசு என்று பாராட்டப்பட்டவர்!

சிறந்த கலைஞரைத் திரை உலகமும், நல்ல மனிதரைத் தமிழ்நாடும் இழந்திருக்கின்றன!

அவருக்கு நம் இறுதி வணக்கம்!



# முதலமைச்சரால் சட்டமன்றத்திற்குத் தலைகுனிவு!

விடுதலை ராஜேந்திரன், திராவிடர் விடுதலைக் கழகம்

ரசிகர்களை வெறியூட்டுவதற்கும் உசுப்பேற்றுவதற்கும் தயாரிக்கப்பட்ட பேச்சுகளைப் பேசிப் பழக்கப்பட்டவர் விஜய். இப்போது முதல்வர் பதவிக்கு வந்த பிறகும் அதைத் தவிர வேறு எந்தப் பேச்சையும் அவரால் பேச முடியவில்லை. எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்பது அவரது முதல் பிரச்சினையாக இருந்தது.

அதற்காகவே வசைச் சொற்களை வீசினார். எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு தான் அவருக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைத்தது. "அப்பாடா! இனி 'ஸ்கிரிப்ட்டை' ரசிகர்களிடம் பேசுவது போல் பேசலாம்" என்ற நிம்மதிப் பெருமூச்சு அவருக்கு வந்திருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், ரசிகர்கள் அல்ல! அவர்கள் முதல்வர் விஜயின் பேச்சுக்கு விசில் அடித்துக் கைதட்டி ஆரவாரம் செய்ய சட்டமன்றத்திற்கு வரவில்லை என்பதை அவருக்குப் பேச்சு தயாரித்துக் கொடுத்தவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

விஜய் வருகைக்கு முன் தங்கள் அலுவலகத்துக்கு சோபா வந்தது என்பதை சில தலைவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முதல்வர் விஜய்யிடம் இருந்து ஏன் திட்டவட்டமான மறுப்பு வரவில்லை? பூசி மெழுகி அதைக் கடந்து செல்வதற்கு இவர் ஏன் முயற்சிக்கிறார்?

தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளில் "தமிழ்த்தாய் வாழ்த்து" பாடித் தொடங்கும் மரபு தமிழ் நாட்டில் நீடிக்கிறது. "தமிழ்த்தாய் வாழ்த்து" தான் தமிழ்நாடு அரசின் பாடல் என்று திராவிட மாடல் ஆட்சி நடத்திய மு.க.ஸ்டாலின் அரசு ஆணையும் பிறப்பித்திருக்கிறது. அதேபோல் சட்டமன்ற நிகழ்வு தொடங்குவதற்கு முன்பும் "தமிழ்த் தாய் வாழ்த்து" தான் பாடப்பட்டு வந்தது. இதில் "ஜன கன மன" தேசிய கீதத்தை ஏன் இணைக்க வேண்டும் ? "வந்தே மாதரம்" பாடலைப் போல் தமிழ் வாழ்த்துப் பாடலும் ஒரு விருப்பத் தேர்வுதானே தவிர சட்டபூர்வமான தமிழ்நாட்டுக்கான பாடல் அல்ல. தேசிய கீதமே சட்டபூர்வமான பாடல் என்ற கருத்தியலை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

மாநில உரிமையை அடகு வைத்து விட்ட இந்தச் செயலை மறைப்பதற்கு ஓர் ஆதாரத்தைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதாவது சட்டமன்றத்தில் கலைஞர் படத்தைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்றபோது முதலில் தேசிய கீதமும் பிறகு தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப் பெற்றது என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். இந்த ஓட்டைவாதம் மக்களிடம் எடுபடாது என்பதைத் தெரிந்து கொண்ட அவரே இதற்கான பதிலையும் கூறிவிட்டார், குடியரசுத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சி என்பதால் தேசிய கீதம் பாடி இருக்கலாம் என்று அவரே அதற்கு விளக்கமும் கூறியிருக்கிறார். பிறகு இதில் குற்றம் சாட்டுவதற்கு என்ன இருக்கிறது?

சொல்லப் போனால் இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் தொடக்கத்திலும் இறுதியிலும் தேசிய கீதம் மட்டுமே பாடப்பட வேண்டும் என்று இருந்த மரபைத் தமிழ்நாடு அப்படியே ஏற்காது. தேசிய கீதத்தோடு தமிழ்த்தாய் வாழ்த்தையும் இணைத்து இங்கே பாட வேண்டும் என்று அதிலும் மாநில உரிமையை நிலைநாட்டி இருக்கிறார் தமிழினத் தலைவர் கலைஞர் .

இதற்கு நேர் மாறாக தமிழ்நாடு சட்டமன்ற மரபுகளை மாற்றி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலோடு தேசிய கீதத்தையும் கொண்டு வந்து இணைத்து தமிழ்நாட்டின் தனித்துவமான அடையாளத்தை சிதைத்து இருக்கிறார் முதல்வர் விஜய்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரையில் எடுத்து வைத்த எந்தக் குற்றச்சாட்டுக்கும் முதல்வரிடம் இருந்து பதில் வரவில்லை. மாறாக வசை மொழிகளை முதல்வர் என்ற தகுதியிலிருந்து கீழே இறங்கி வீசி இருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் இல்லாத போது அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளைப் பேசலாமா? என்று அவரே கேட்டுக் கொண்டு அதற்குப் பேரவைத் தலைவர் அனுமதியையும் வாங்கிக் கொண்டு பிறகு தனது "ஜிக்கு புக்கு" வசனங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

பொதுவாக சட்டமன்ற உரைகளில் மேடைப் பேச்சு போல உரத்த குரலில் முதல்வர்கள் பேசுவதில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் காதில் விழ வேண்டும் என்பதற்காக உரத்த குரலில் பேசுகிறேன் என்றும், அதற்குப்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## வீரபாண்டிய கட்டபொம்மன்

பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டில் சிகிச்சை பெற்று திரும்பியபின் 1968 ஆம் ஆண்டு சட்டமன்ற அவை நடவடிக்கையில் கலந்துகொண்டார். அப்போது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் டி.என்.அனந்தநாயகி அவர்கள் அண்ணாவைப்பார்த்துக்கேட்டார்,"நீங்கள்வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பியிருக்கிறீர்கள். அதற்கான செலவு எவ்வளவு? அது உங்கள் சொந்தப் பணமா? அரசுப்பணமா? அல்லது உங்கள் கட்சிப்பணமா?" "நாளை இந்த அவையில் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு அண்ணா போய்விடுகிறார்.

மறுநாள் பேரவையில் அனந்தநாயகி மீண்டும் அண்ணாவின் சிகிச்சைப்பணம் குறித்து கேள்வியை எழுப்புகிறார்.

அப்போது அறிஞர் அண்ணா, " என் சிகிச்சைக்கான செலவுத்தொகை ஒரு லட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாய். அந்தப் பணம் அரசின் செலவல்ல. கட்சியும் கொடுக்கவில்லை. எனக்காகச் செலவு செய்தவர் என் தம்பி எம்.ஜி.ஆர்தான். நேற்று அவர் இந்த அவைக்கு வரவில்லை. அதனால் நான் பதில் சொல்லவில்லை. இன்று வந்திருக்கிறார், அவர் முன்னால் சொல்லிவிட்டேன்" என்றார். இதுதான் அவை மரபு, நாகரிகம், ஒழுக்கம், பண்பாடு.

சில நாள்களுக்கு முன்னர் சட்டமன்றத்தில், முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அவர்களை அசிங்கப்படுத்துவதாக நினைத்து, அவையில் இல்லாத அவரை 'எங்கே அப்பாவைக் காணோம்' என்று ஒரு சைகையும், தலைவர் ஸ்டாலின் அவர்கள் முந்தைய தேர்தல் பிரச்சாரத்தின்போது தற்செயலாகக் காட்டிய சைகையை அவையில் கேலியாகக் காட்டியும் முதல்வர் விஜய், தன்னை ஒரு நடிகனாகவே காட்டி அசிங்கப்பட்டுப் போனார்.

அமைச்சர் நிர்மல்குமார் சொல்கிறார், ஆளுநர் என்பவர் ஒரு 'மேனேஜர்' தான் என்று. இல்லையில்லை... மத்திய, மாநில வளர்ச்சிக்கு இணைப்பாக இருப்பவர் ஆளுநர். குடியரசுத் தலைவருக்கு இணையாக மாநிலத்தில் இருப்பவர் ஆளுநர் என்று, நிர்மல்குமாரை மறுத்துப் பேசுகிறார் செங்கோட்டையன். இவர் ஆர்.என்.ரவியை ஏற்கிறாரா ?. இருவரும் தவெக அமைச்சர்கள்தான்.

எல்லாம் சரி, இவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்னென்னத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்? எப்படி முடிவெடுக்கப் போகிறார்கள்? எப்படி நடைமுறை ப் படுத்த இருக்கிறார்கள்? மக்களைக் குறித்து முதல்வர் விஜய் எதுவும் பேசுவதில்லையே! ஏன்?

வைத்தால் குடுமி, அடித்தால் மொட்டை என்பது போல, பேசுகிறேன் என்று எழுதிக் கொடுத்துள்ள பேப்பரை வீரபாண்டிய கட்டபொம்மனைப் போல ஓங்கி ஓங்கிப் பேசுவார் எப்போதாவது சட்டமன்றத்தில். மற்றபடி அவர் பேசாமடந்தையாகத்தான் இருப்பார்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்றும் உலக சட்டமன்ற வரலாற்றில் எந்த முதலமைச்சரும் கேட்காத ஒரு அனுமதியை முதல்வர் விஜய் கேட்டு அதற்குப் பேரவைத் தலைவர் அனுமதியும் வழங்கிய ஒரு அதிசய காட்சியும் சட்டமன்றத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இத்துடன் கூடுதலான ஒரு கோரிக்கையையும் முதலமைச்சர் வைத்திருக்கலாம். உரத்த குரலில் பேசும்போது அவையில் ஒலிபெருக்கிகளை அணைத்து விட வேண்டும் என்றும் கேட்டு இருக்கலாம்.

அதேபோல் உரையின் இறுதியில்தான் ஒரு "ஆக்க்ஷன்" நடிப்பு செய்யப் போவதாகவும் அதற்குப் பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். உடனே பேரவைத் தலைவர் உங்கள் விருப்பப்படி எந்த "ஆக்க்ஷனையும்" செய்து கொள்ளுங்கள் என்றும் அனுமதி அளித்திருக்கிறார்.

முதல்வர் விஜய் நிகழ்த்திய அந்த ஆக்க்ஷன் என்ன தெரியுமா? 'கழுத்தைச் சீவுவது' போல ஒரு ஆக்க்ஷன்! பின் வரிசையில் அமர்ந்திருந்த அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அரியகாட்சியைக் கண்டு ரசிப்பதற்கு ஒரு டிஜிட்டல் திரையை ஏற்பாடு செய்திருக்கலாம்.

பேரவைத் தலைவர் இந்த ஆக்க்ஷனை சபைக் குறிப்பேட்டில் எப்படிப் பதிவு செய்யப் போகிறார் என்பது தெரியவில்லை! ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தொலைக்காட்சியில் இந்த ஆக்க்ஷனை நேரில் பார்த்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு இப்படி ஒரு முதலமைச்சரா என்று தலை குனிய வைத்து விட்டது முதல்வரின்

'சவுண்ட்' - 'ஆக்க்ஷன்' - 'டயலாக்'.

(முகநூலில் இருந்து)

# இது, அவாள்களின் காலம்!

குமரன் தாஸ்

பார்ப்பனர்கள் வென்று விட்டனர்! பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட பட்டியலின மக்கள் தோற்று விட்டனர்!

ஆம்! ஜூன் 22.2026 தமிழ் இந்து நாளிதழில் இரண்டாம் பக்கத்தில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் மயிலாப்பூர் டி.ஆர்.ரமேஷ் என்பவர் கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அது எழுதப்பட்டுள்ளது.

அதில் கடந்த திமுக ஆட்சியில் அறநிலையத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டு கட்டப்படாமல் இருந்த 17வணிக வளாகங்கள், 29 திருமண மண்டபங்கள் என மொத்தம் ரூ.245 கோடி மதிப்புள்ள 46 கட்டுமானப் பணிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி அனைத்தும் இப்போதைய தவெக ஆட்சியில் ரத்து செய்யப் பட்டதை வரவேற்று அவர் பேசியுள்ளார். அது மட்டுமல்லாமல் திமுக ஆட்சியில் ஆலய வருவாயில் அறநிலையத் துறையானது பள்ளிகளையும், கல்லூரிகளையும் கட்டிப் பணத்தைச் சீரழித்ததாகவும், இனி தவெக ஆட்சியில் இத்துன்பங்கள் தொடராது என்றும் டி.ஆர்.ரமேஷ் கூறியுள்ளார்.

மேலும் இந்து அறநிலையத்துறை பணம் புனிதமான காரியத்துக்கு மட்டும் தான் பயன்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அதாவது கல்லூரி கட்டுவதும், வணிக வளாகம், திருமண மண்டபம் கட்டுவதும் புனிதமற்ற செயல் என்று கூறுகிறார்.

ஏற்கனவே இராமேஸ்வரம், மதுரை போன்ற ஊர் கோயில் பிரகாரங்களில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் கடைகளை அகற்றச் சொல்லி அரசு நெருக்கடி கொடுத்த வேளையில் மாற்று ஏற்பாடாக வணிக வளாகங்களைக் கட்டி சிறு வியாபாரிகளுக்கு வழங்கினால் அவர்களும் அவர்களது நூற்றுக்கணக்கான குடும்பங்களும் பிழைத்துக் கொள்ளும் என்ற கோரிக்கை எழுந்தது.

அதே போல அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபங்கள் கட்டப்படுமானால் தனியார் திருமண மண்டபங்களுக்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிப்பதற்கு மாறாக ஏழை எளிய இந்துக்கள் கோவில் திருமண மண்டபங்களில் மகிழ்ச்சியுடன் தங்களது குடும்பத் திருமணங்களை நடத்திப் பயனடைவர்.

அறநிலையத் துறை சார்பில் கட்டப்படும் பள்ளி, கல்லூரிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம் ஏழைகளுக்கு பயனளிக்கும் மிகவும் புனிதமான செயல் அது. இவ்வாறான பணிகளைச் செய்வதன் மூலம் ஏழை எளிய இந்துக் குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றலாம் என்கிற வகையில் தான் திமுக அரசு இந்நற்காரியங்களை மேற்கொண்டது. அதாவது ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பது தான் திமுகவின் கொள்கை ஆகும்.

ஆனால் அது தவறு என்று இந்த மயிலாப்பூர் மாமா கூறுகிறார். அதாவது கோயில் வருமானத்தில் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின இந்துக்கள் பலன் பெற்று விடக்கூடாது. அந்த வருமானம் முழுவதையும் பார்ப்பனர்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறு கூறுகிறார். அவரது இந்த ஜாதிக் கண்ணோட்டத்தை மறைக்க "இந்து" என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார். அப்படியென்றால் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் இந்துக்கள் இல்லையா என்ன?

அவரிடம் நாம் கேட்க வேண்டிய மற்றொரு முக்கியமான கேள்வி ஒன்று உள்ளது. கோயில் வருமானம் என்கிறீர்களே அது எங்கிருந்து வருகிறது? இந்த நாட்டில் பெரும்பான்மையாக உள்ள பார்ப்பனரல்லாத (பிற்படுத்தப் பட்ட, பட்டியலின) மக்கள் அன்றாடம் உண்டியலில் இட்ட காணிக்கை, மொட்டை போடுவது, அர்ச்சனைச் சீட்டு வாங்குவது ..... போன்றவற்றால் கிடைத்த வருவாயல்லவா அது? அதாவது அவர்களது உழைப்பில் விளைந்த பணம் அல்லவா? அந்தப் பணத்தில் தானே பள்ளி கல்லூரிகள் கட்டப்படுகின்றன? அவர்கள் அளித்த காணிக்கையில் விளையும் பலனை அவர்களது குழந்தைகள் அனுபவிப்பதில் என்ன புனிதம் கெட்டுவிடுகிறது.

மேலும் இந்து அறநிலையத்துறை வருவாய் முழுவதையும் இப்பணிகளுக்குச் செலவிட வில்லையே! ஆலய பராமரிப்பு, குடமுழுக்கு, ஆலயக் கட்டுமானம், மராமத்து போன்றவற்றிற்கு எல்லாம் அதிக அளவு திமுக அரசு செலவு செய்துள்ளதே! கடந்த 5 ஆண்டுகளில் அதிக அளவு குடமுழுக்கும் நடைபெற்றுள்ளதே!

ஆக, மயிலாப்பூர் டி.ஆர்.ரமேஷ் இன் நோக்கம் கோயில் நலன் சார்ந்ததோ, இந்துக்களது நலன் சார்ந்ததோ அல்ல!பார்ப்பனர்களது சுய நலன் சார்ந்தது, தங்களது கைகளில் ஆலயங்களை ஒப்படைத்துவிட்டு அரசு வெளியேற வேண்டும் என்பதே அடிப்படை நோக்கம்.

அதன் முதற்படியாக, தங்களவா இப்போது அறநிலையத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதில் பார்ப்பனர்கள் குதூகலமடைகின்றனர் . அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் நிர்வாகத் திறனைப் பாராட்டி தமிழ் இந்துவில் எழுதுகின்றனர். திமுக அரசு கட்டத் திட்டமிட்ட வணிக வளாகம், திருமண மண்டபம் கட்டுமான அறிவிப்பு ரத்து செய்யப் பட்டதைப் பாராட்டவும் வரவேற்கவும் செய்கிறார்கள்.

ஆக தவெக ஆட்சி மயிலாப்பூரார்களின் பரிபூரண ஆசியுடன் தான் அமைந்து - தொடர்கிறது என்பதுடன் அது பார்ப்பனரல்லாத தமிழர்களின் நலன்களுக்கு எதிரானது என்பதும் உறுதியாகிறது!

பார்ப்பனரல்லாதார் இனியாவது விழித்துக் கொள்வார்களா? ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian